கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] சுக்கிலஹு ஐப்பசிமீ [பகுதி—கஉ.
Vol. XXVII. October-November-1929. No. 12.

## தொல்காப்பியச் சூத்திரப்பொருளாராய்ச்சி.

"வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே." (எழு—புண—கசு)

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் "வேற்றுமையுருபுகள் பெய
ரின் பின்னிடத்தனவாம்; அவற்றோடு புணருநிலைமைக்கண்" என உரை
கூறினர். இளம்பூரணரும் அவ்வாறேயுரைத்தனர். இவ்வுரையை
மறுத்துச் சிவஞானமுனிவர் "பிறண்டுக்கூறுமாறுபோல வேற்றுமை
யுருபென்னுமையானும், ஆறனுருபு இறுதியிற்றொகுமெனின் 'ஐயுங்
கண்ணும்' என்னுஞ் சூத்திரவிதியோடு மாறுபடுதலானும், கூறியது
கூறலாமாகலானும், அவ்வுரை பொருந்தாதெனவும், அதற்குப் பொருள்;
நால்வகைச்சொற்களும் இருவழியும்புணருமென மேலெய்தியதனை ஒரு
மருங்குமறுத்துப் பெயர்ச்சொற் புணருநிலையே வேற்றுமை வழியவாம்
என்பது பொருளெனக்கொள்க. ஏகாரம் பிரிநிலையென்க. எனவே
வினைச்சொன் முதலிய மூன்றும் அல்வழியாவனவன்றி வேற்றுமை
வழியவாகா எனவும், பெயர்ச்சொற்கள் இருவழியுமாமெனவும் கூறிய
வாறாயிற்று. இங்ஙனஞ் செம்பொருள்கொள்ளமாட்டாதார் 'பெயர்
வழிய' என மாறி அவற்றுடனென வருவித்துப் புணர்நிலை என்பதை
யும் வெற்றெனத்தொடுத்தலாக்கிக் கூறியதுகூறல் என்னுங் குற்றப்பட
இடர்ப்பட்டுப் பொருளுரைத்தார்" எனவுங் கூறினர். சிவஞான
முனிவர் உரையும் மறுப்பும் பொருத்தமுடையுவோ? என ஆராய்தும்;

ஆசிரியர், "வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி" எனப் புணர்ச்சி இருவகைப்படும் எனக் கூறிப் பின் வேற்றுமை யுருபு இவை யெனக் கூறி, அவை புணருங்காற் படுமாறுங் கூறி, அவை இன்ன சொல்லோடு புணரும் எனவுங் கூறி, அச்சொல்லின் வகைகூறி, அச்சொல்லோடு சாரியை புணருமாற்றையுங் கூறியமுறையை நோக்கும்போது, அதிகாரப்பட்டுநின்றது வேற்றுமை என்பது தெளிவாதலின், அதற்கிவைப் பொருள்கோடலே பொருத்தமாகுமன்றி, பெயர் புணருமாறு கூறியதெனப் பெயரதிகரித்துநின்றதாகக்கோடல் பொருத்தமன்றென்பது பெறப்படும். அன்றியும், ஆசிரியர் நால்வகைச்சொற்களையும் முதலிற் சூத்திரித்துப் பின் பெயரைப் பிரித்துக்கூறினாலும் ஒருவாறு பொருந்துமெனக் கோடலாம்; அங்ஙன மின்மையானும் அது பொருத்தமன்றென்பது தேற்றமாம். அன்றியும், பெயர் கூறியபின் "அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே" எனப் பெயர்ப்பின் சாரியை புணருமாறு கூறியமையானே உருபுகளும் பெயர்ப்பின்வந்து புணருமென ஆசிரியர்கூறவேண்டியதும் அவசியமாம் என்பதுந் துணிபாதலானும் முனிவருரை பொருத்தமன்றென்பது தெற்றெனப்படும். (உருபு பெயரொடு பின்வந்து புணரும்; பெயர்ப்பின் சாரியைவரும்; எனவே, பெயர்ப்பின் சாரியையும் பின் உருபும் புணருமென்பது ஆசிரியர் கருத்து.) அங்ஙனேல் "வழிய பெயர்" என்பதைப் "பெயர்வழிய" என மாற்றிக்கோடல், "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்—மெய்யுருபு தொகா விறுதி யான" என்பதோடு மாறுபடுமன்றே? எனின், வேற்றுமையுருபுகள் பின்னிடத்தனவாம் பெயரோடு புணருநிலைமைக் கண்" எனப் பொருள்கொள்ளுமிடத்து, பின்னிடத்தனவாம் என்பதற்குப் பெயர்க்கு என்பது அவாய்நிலையான் வந்தெய்துமாகலான் மாறுபடாதென்பது. இக்கருத்தை யுட்கொண்டே உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் மாற்றிக் கூறியிருத்தல்வேண்டும். அங்ஙனேல் கூறியது கூறலாகாதோ? எனின் ஈண்டுப் புணர்ச்சி கூறுதற்பொருட்டு ஈற்றினிற்கு மென்றார்; ஆண்டுப் பொருளுணர்த்துதற்பொருட்டு ஈற்றுநிற்கு மென்றார்; ஆதலின் அக்குற்றம் வாராதென்பது. வருமேல், ஆண்டுக் கூறிய உருபுகளை ஈண்டுக்கூறியதூஉம், ஆண்டுக்கூறிய பெயர்வகையை ஈண்டுக்கூறியதூஉம் குற்றமாகுமென விடுக்க.

சி. கணேசையர்.

---

# பெண்மை.

நிலைபற்ற சில உறுப்பு வேறுபாடுகளன்றி, மக்களுள் ஆடவர்க்கரிய
தாய் மற்றவர்க்கே உரியதாய் நிலைத்த பெண்ணீர்மை என்பதொரு
தனிப்பான்மையுண்டோ? என்னு மைபம் பெருகிவரும் தற்காலநாகரிக
வுலகில் "பெண்மை" பற்றிய ஆராய்ச்சி பயன்படுமோவென்று அஞ்சு
கின்றேன். உருவோடு உணர்ச்சி தொழிற்றிறங்களாலும் இருபாலாரும்
தம்முள் 'இயல்வேறுபாடுடையவரென்று இதுகாறும் எண்ணிவந்த
கருத்து இப்போது சிறுகாலமாக நிலைதடுமாறி அலமருகின்றது.
எனைத்தானும் ஆடவரினின்றும் வேறுபடா உணர்ச்சியும், அவர்
தொழிற்றுறைகளனைத்திலுமே சமஉரிமைப்பாடும் தற்காலம் பெண்
பாலார் கொண்டாடிவருகின்றனர். அவயவ அமைப்பிலுங்கூடப் பால்
பகுத்தறியவொண்ணாப் பொதுமைநிலையுடைய மக்களையும் தற்காலம்
பார்க்கநேருகிறது. ஒருபாலும் மருவாத அலிகள்மட்டுமில்லை; இரு
பாலும் உருவிரவி உறழ்பாலார் சிலரும் உளர். ஒருபாலாய்ப்பிறந்த
வரும் நாளடைவில் மறுபாலின்பான்மையெலாம் மருவவும்பெறுகின்ற
னர். இவ்வாறு பால்நிலையே தடுமாறப் பார்க்கின்றோம். எனவே பெண்மை
யென்பதொன்று உண்டா? உளதெனில், பெண்ணியல்புதான் என்னை?
இதுபற்றிச் சிறிது ஆராய விடைகொள்வாம்.

யாண்டும் யாதும் ஒருபொருளின்றிச் சொல்லமையா. குறித்த
பொருளை வகுத்துத் தொகுக்கும் சொல்லமைதி தமிழில் பெருவா
விற்றும் பண்பு தொழில் முதலியவற்றுள் ஒன்றன் தனிச்சிறப்
புடைமை தனிஉரிமைப்பாடுபற்றி ஒருபொருளை விளக்கும் ஆற்ற
லுடைய சொல்லாட்சியே ஆன்ற பழந்தமிழ்மாபு. 'பெண்மை' என்பது,
"பெண்" என்னும் முதனிலையடியாகப் பிறந்துளதாகவே, இது பெண்
தன்மையைக் குறிப்பது என்பது வெளிப்படை. ஆகவே, இனிப்
"பெண்" எனும் சொற்பிறப்பும் அதன் பொருட் குறிப்பும் ஆராய

வேண்டும். நட்புநிலையினர் நண்பராவதுபோல, பெட்புநிலையினர் பெண்டிராவர். 'பெட்பு'ச்சொல் காதற்பொருட்டு. பேணற்குரிமை அதன் குறிப்புப்பொருள். எனவே காதற்கிழமைக்குச் சிறந்தவர் பெண்மக்கள் என்பது விசதமாகிறது. அதாவது, பெண்மைச்சொல் காதலிப்பவர் காதற்குரியவர் என்றிருவகையும் பொருளியைபு பொலிந்து பெண்ணியல்பின்பெருமையை விதந்து சுட்டிநிற்கும். எனவே, அன்பின்பண்பிற்கு அடிக்களமும் முடிக்கனியுமாவது பெண்ணீர்மை என்பது பெறப்படுகின்றது. காதலை ஆக்கவும் ஆளவும் வல்லுனர் பெண்டிரே. அஃது அவர்தஞ் சிறப்புரிமையாகும். அன்புவழிப் பேணலும் பேணப்பெறலும் பெண்டிர்மாட் டியலமைப்பு என்பதே பெண்மைச்சொல்லின் உண்மைப்பொருளாகும்.

உறவு, உதவி, அண்மை, இனிமையாதி காரணம் எதுபற்றியேனும் உளங்கனியுமிடங்களிலே எல்லாரும் அன்பு செய்வர் : தந்தை மகனையும், நண்பன் அன்பனையும் காதலிப்பது இயல்பாகலான், பெண்டிர் காதலுக்குச் சிறப்புரிமைகொள்ளுவது எங்ஙனம்? எனிற் கூறுதும். பொதுநோக்கில், காதல் மக்கட்குமட்டுமில்லை ; அகில உயிரினத்துக்குமே பொதுக்குணமாகிநிற்கும். எனினும், காதலிக்கும் முறைவிசேடங்களாலும் காதற்றன்மையாலுமே காதல் மாந்தரிடம் சிறந்து மலர்வதனுல், மற்றும் மாக்களினும் மக்களே காதற்கிழமையுடையாராகக் கருதப்படுகின்றனர். அதுபோலவே மக்கள்வருக்கத்துள்ளும், நம்பியரைவிட அன்பிற்கு நங்கைமார் தங்குமிடனுகின்றனர். ஆண்மக்கள் வாழ்க்கையிற் காதலைத் தமக்குத் தனிமுழுநோக்கமாகக் கொள்ளுவதில்லை. வீரம், செல்வம், கல்வி, புகழ் முதலியனபலவும் அவர்மனத்தைக் கவருகின்றன; அவருள்ளத்தில் ஒருங்கே ஒத்து இடம்பெறுகின்றன. மடந்தைமார் மனப்பான்மை இதற்கு மாறுபட்டது. அன்புகனிந்தவழி, மடவார் இதயமுழுதுமே காதற்களனுகிமலரும். பெருகுமன்பன்றிப் பிறிதெதுவும் அவருளத்தில்ஒதுக்கிடமும் பெறுவதில்லை. காதல் பெண்டிர் பெருங்குணமான நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவையும்

உடைத்து, அவர்உள்ளத்தரண் எறிந்து இடங்கொண்டு தழைவதாகும். கதித்தகாதல் மங்கைமார் மனமகலா நிறையெனும் அங்குச உருக்கையும் நிமிர்க்கவல்லது ; மடந்தையர்க்குத் தனியுடைமையான தாய்மையைக் கூடத் தனக்கெதிர்முனைப்பில் தவிர்க்கும் தகையது அவர்தம் காதலெனில், அதன் பெருமை அளப்பரிதாம்.

இனிப் பிறபெற்றிகளுக்குச் சிறிதும் இடந்தாது பெருகிப் பெண்டிர்மனத்திற் றனியிடம் கோலும் அவர் அன்பு, கனியாது காயாது 'பூவாது வெறிதே இலைமலிந்து படர்ந்தடரும் புதருமில்லை. பெண்மையைப் பெருமைப்படுத்தும் அனைத்துயர்பண்புப்பயிர்களையும்' வித்தி, அவற்றிற்குத் தானே நீரும் எருவுமாய்நின்று வளர்ப்பதுவும் அப்பெண்டிர்தம் பெருங்காதலேயாகும். அவான்பினாலேயே இல்லாண்மை, தாய்மை, மகண்மை எனும் எல்லாப் பெருங்குணமும் வேரூன்றி வளம்பெற்று வளர்வதாகும். பெண்டிர்பால் அன்பு பிறிதெதற்குமில்லாத பெருங்கிழமை பெற்றுநிற்கும். நல்லார்மனத்தவிசில் எல்லாம் தனக்குரிய இறைமைக்குழவியும், அவர்மனத்தே நல்லவையெல்லாம் நாடிவளர்க்கும் நற்செவிலியும் தானேயாய் மிளிர்வது அவர்தம்போன்பே. தன்வளர்ச்சியைத் தடுக்கும் எதனையும் வேரறுத்துக் களைந்தெறியவும், தான் தழையுங்கால் கண்ணிய குணங்களைத் தண்ணிழல் தந்து உடன் தழைய வளர்க்கவும் ஒருங்கேவல்லது அவர் பெருங்காதலே. அவர் அன்பின்பண்பு தனக்குரிய தகவிடத்தில் முளைகோலித் தனைத்தடுக்கும் களைபடர்த்துத் தளராது தானே தழைதலும், தன்வளர்ச்சி தவிர்ப்பவற்றைத் தகர்த்தொழிக்கும் கணிச்சித்திட்பத்தோடு, வினைத்துறவின் தனிமையை வெறுத்து இல்வாழ்வின் நல்லாற்றில் நின்று நலம்பலவும் உடன் குலவ அவையிற்றை உயிர்ப்பித் தூட்டித் தழைவிக்கும் நெகிழ் நீர் நேசத்திட்பமும் ஒருங்கமைந்து மிளிர்தலுமாம். ஒல்லும்வகையால் நலமனைத்தும் ஓவாதே செல்லும்வாயெல்லாம் செயவல்லது பெண்டிர் போன்பு.

இனி, அன்பைத் தாம் ஆக்கிச் செலுத்தி ஆளுமாற்றலேபோல, பெண்மக்கள் தம்மிடைத் தகவுடையோர் அன்பு நனி அரும்பிக் கனிவு பெறச் செய்விக்கும்பெற்றியும் தாமே உடையராவர். பொருந்தார் உளத்து அவர் புகுதலோ இல்லை; பொருந்திய சான்றோர் திருந்தியமன மார் விருந்தாகி, இருபாலாரிடத்தும் காதலைப் புனிதப்படுத்துவதே பெண்டிர் பேரியல்பு. தம்மையும் தம்வழித் தகவுடைக் குடியையும் பேணும் அன்பைப் பெண்டிர்தரப் பெறுவர் ஆண்மக்கள். மனைமாட்சியை மங்கலமாக்கி, அதற்குரிய நன்கலமாம் நன்மக்கட்பேறுதவி, வாழ்க் கையை வளப்படுத்துவது பெண்ணியல்பே. பெண்ணீர்மைகுன்றின் மக்கள் மென்மையறியார், மேதக்க காதற்சிறப்புணரார். அன்பால் தற் கொண்டானையும், அது முதிர்ந்து மலர்ந்த தகைசான்ற அருளால் அனைவரையும் பேணும் பெருங்கிழமை பெண்டிரியற்சிறப்பாம். பேணு மியல்கிழைவும், பேணுந்துறையறிவும், பேணுமுறை வளமும் எல்லாம் பெண்டிர்மாட் டியலமைந்த தனிச்சிறப்பாம். அவர் பேணப் பெறுத லாலே ஆடவர் தாம் பேணும் அன்புணர்ச்சி பெறுகின்றனர்.

இன்னும், பெண்டிர் அன்பு தாம்வீழ்வார்தம்மாட்டுக் குழையும் மென்மைத்தன்மையோடு நின்றுவற்றும் சிறுமைத்தன்று. தம்மைத் தாம் தலைக்காத்துத் தற்கொண்ட ஆடவரை அறத்துறையில் நிறுத்தும் வன்மையும் பெண்ணீர்மை பெற்றுடையதாம். குடிப்பெருமையை நீட்டி யுயர்த்தும் நீள்வினைக் கின்றியமையாத 'ஆள்வினையும் ஆன்ற அறிவும்' பெண்டிர் பெருஞ்சிறப்பாம். ஆடவர் அநுபவிக்கக் குழைந்திழையும் மலர்க்கொத்தே பெண்களென்பார் இபலறியார். அறந்தழைய அடிக் களனுப், தமக்கின்பம்விழைபாமல் உடம்பு இடும்பைக்கிலக்கெனத் தெளிந்து பிறர்பொருட்டுப் பரித்தியாகமும், காதல்வழி உயிரையும் துறக்கும் கலங்காத துணிவுள்ள முடைமையும் பெண்மைவளச் செம் புலத்துப் பைங்கூழாம். இதுபற்றியன்றோ வள்ளுவரும், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற—சொற்காத்துச் சோர்விலா'ளையே பெண்ணெனப் பேசுகின்றார். எனவே, பெண்மை அன்புருவும் அறத் துயிருமாவதென அறிகின்றோம்.

இனி, "நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்ற குறளுரை, வாய்மையாம் எனினும், முழுமெய்ம்மையாகாது. இக் குறட்பொருளுண்மை தெளியின், பெண்டிரைத் தம்மினமாப்பெற்ற பெருந்தொகுதியாதல் பற்றியே மாந்தர்வகுப்புக்கு இப்பேறு வந்துற்றதென்பது அங்கையிற் கனியாகும். பெண்மைமாடம் நின்றதூண்கள் நான்கனுள் முதலது நாணுவதும், ஆண்மைநடக்கும் அடிகள் நான்கில் யாண்டும் அது வைத்தெண்ணப்பெறுமையும், நாணுடைமை முதலிற் பெண்ணுரிமை என்பதை வலியுறுத்தும். சால்பூன்றியதூண் ஐந்தனுள்ளே இறுதி வாய்மை இருபாலோர் பொதுவுடைமையாக, மற்றைநான்கும் முதலிற் பெண்டிர்க் கியற்குணமாய் அவருட்ட ஆடவர்பால் அவை ஊட்டம் பெறுவதை நடுநிலையிற் சிந்திப்பார் நன்குணர்வர். எனில், பெண்மையே சான்றாண்மை எனச் சுருங்கச்சொல்லில், அஃது அமைவுடைத்தாம். சான்றாண்மை நன்புலத்தில் முளைத்துவளரும் பெண்மைக்குப் பிறிது இலக்கணம் வகுத்தல்வேண்டா. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை—எனும் ஐந்தனுள் அமையாத சால்புடைமை யாதும் இல்லை. மானுடப்பெருமைக்குரிய பண்பனைத்தும் இவ்வைந்தனுள் வந்தடங்கும். இவ்வைந்தையும் ஒருவாறு முதன்மூன்றனுள்ளே அடக்கலுமாகும். இவ்வாறு முக்காலிற் சான்றாண்மை நிற்றல்கூடும். அதன்கனியாம் பெண்மைப்பெருங்குழவி நின்றிலக மூன்றுகால்கூட மிகை. பெண்மைநிதி வள்ளுவர் முன் முதல்வகுத்த அன்பொன்றில் தான் ஒன்றித் தலைநின்று மிளிர்வதாகும். அன்பொன்றே சான்றாண்மை வித்தாகும். அதனுள்ளே பிறவெல்லாம் அமைந்து நிற்கும். நல்ல பிற குணமெல்லாம் அன்புவிதை முளைக்கத் தாம் கிளைத்தளிராய், முதல்தழைய அது தழுவி உடன்தழையும் அதற்குரிய இயல் உறுப்பாய் அமைந்தடங்கும். சான்றாண்மைமலர் பிஞ்சாய்க் காய்காழ்த்து* அதிற்பழுக்கும் நறுங்கனியே பெண்மையாகும். எனவே, பெண்ணீர்மை †கண்ணும் பெருங்

*காழ்த்தல் - வயிரமெய்தல்=திண்ணியதாதல்.

†கண்ணுதல்—கருதல்=குறித்தல்.

குணமெல்லாம் விரித்து ஈண்டுப் பேசல்வேண்டா. பெண்மையை அன்பின்திண்மையெனல் தவறாகாது. காழ்த்துமுதிர்ந்த கனிச்சுவைபோல், வளமலிந்த அன்பின்பழரசமேபெண்மையாகும். தானும் இனித்துதவித் தன்காழால் பழமரங்கள் வித்திவருங் கனியேபோல், பெண்மை தானும் காதலித்துத் தம்வீழ்வார்தம்மிடையும் அக் காதற்கனியைக் கனிவித்தொளிரும் ஒரு கற்பகமாம். யாண்டும் கனிவிக்கும் ஒட்பமும், வேண்டுழிக் ‡காழுதவும் திட்பமும் ஒருங்கமைந்த சான்றாண்மைத்தருவில் வரு தலைக்கனியே பெண்மை எனலாம்.

ச. சோமசுந்தர பாரதி.

---

உ

# பிழைதிருத்தம்.

செந்தமிழ் உ௬-ம் தொகுதியின் ௱௪-ம் பக்கத்து அடிக்குறிப்பு,—"வெண்களமர், கருங்களமர் என்ற சொற்களுக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை. உழவர் போர்வீரர்களை முறையே அவை குறிப்பன போலும்" என்றிருப்பதற்குப் பிரதியாக, "'கருமை செம்மையாகிய பண்பினாலன்றி வெள்ளாளரை வெண்களமர் என்றும் புலையரைக் கருங்களமர் என்றும்...............சொல்லுதல் வழுவன்று' என்று சென்னை ஓரியண்டல் லைப்ரரி 56 நிர் தொல்காப்பியச் சொல்லதிகார உரைச்சுவடியில் இருப்பதைக் காண்க" என்று மாற்றியெழுதிக்கொள்க.

இவ்விருபத்தேழாந்தொகுதியின் ௩௧௧-ம் பக்கம் 20-ம் வரியில் சுத்தவானத்தில் என்றிருப்பதைச் சித்தவானத்தில் என்றும், ௩௧௬-ம் பக்கம் ௬-ம்வரியில் தொன்மெய் த்தே என்றிருப்பதை, தொன்மெய் ஒத்தே என்றும், ௩௧௭-ம் பக்கம் கடைசிவரிக்கு முந்தியவரியில் 11-ம் பக்கத்தில் என்றிருப்பதை 15-ம் பக்கத்தில் என்றும் திருத்திக்கொள்க.

---

‡காழ்—கொட்டை=விதை.

உ

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உசுசு-ம்பக்கத்தொடர்ச்சி.]

## இராவணன் விரகதாபத்தால் சந்திரனைச் சூரியனெனல்.

[பனிக்காலத்திலும் குறையாமல் இயல்பாக வளர்ந்துகொண்டிருந்த விரகதாபம் வேனிற்காலத்தில் விரைவாய் மிகுதிப்பட்டதற்கு வருந்திய இராவணன், அந்தத் தாபம் மழைக்காலத்திலும் வளர்தலுறவே, அதிக வருத்தமடைந்தான். சந்திரன் உதிக்கக்கண்டு, தன் தாபம் சந்திரனால் தணியுமென் 'றெதிர்பார்த்ததற் கெதிராக மிகுதிப்பட, அத்தியந்த வேதனை அடைந்தான். சமுத்திரத்தினின்றெழுந்த சந்திரன், சமுத்திரத்திற் கண்வளரும் திருமால் சமயம் நோக்கிக் காத்திருந்து இராவணன் உயிர்குறித்துச் சமுத்திரத்தினின்றெறிந்த சக்காரயுதம்போன்றது. இராவணனது காமாக்கினி, அவன் அமாரிடம் கவர்ந்துவைத்திருந்த அமுதத்தை அள்ளியள்ளி அருந்தியும் அணுவளவும் குறையவில்லை. அவன்மேனிமீது வெண்ணிலா வீசியது, நெருப்பிலுருக்கிய வெள்ளியை அள்ளிவீசினாற்போன்றிருந்தது. இதுகாறும் தான் விரும்பிய மாதரை விரைவாய்மேவிக் காம இன்பம் அனுபவித்ததன்றிக் காமத்துன்பத்தை அறிந்திராத இராவணன், இப்போது அவ்வாறு மேவப்பெறாமையால், விரகவேதனையிகுந்து, விவேகமிழந்து, சந்திரனைச் சூரியனென மதிமயங்கித் தன் அயல்நின்ற ஏவலரைநோக்கி, இரவில் சூரியன் வருவானேனென, அவர்கள், அஞ்சி வாய்புதைத்து "இது சூரியனன்று, சந்திரன், சூரியன் எதிரே மறையும் விண்மீன்கள் விளங்குவதை நோக்குக" என்றனர்.

## அவன் சூரியனைச் சந்திரன் எனலும் பிறையைப் பழித்தலும்.

பகலும் சூரியனும் வர, விரகதாபம் தன்னியல்பாக அதிகப்பட, அதைதறியாமல், அவன், "காமத்தைவளர்த்தலால், இது, காமோத்தீபகமான சந்திரன்" என்றான். நிறைமதிப்பக்கம்போய்க் குறைமதிப்பக்கம் வர, பிறைச்சந்திரன் பூரணசந்திரன்போலாகாமல், தன் தாபத்தைத் தணிக்குமென்று, ("கட்டில் தலைதிருப்பிவைத்தால் தலைவலிபோம்"

என்று எண்ணிய தலைநோயாளிபோல்) எண்ணிய இராவணன், பிறைமதியினால் தாபம் தணியாமைகண்டு, அதனை வெறுத்து "ஏ! பிறையே! வடவாமுகாக்னியின் நாவையும் படவாளராவின் பல்லையும்போலிருக்கின்றாய், மாலைக்காலமான காலன் பிடித்த வாளையும் ஒக்கின்றாய், கருவிடத்தைக் கழுத்தில் தரித்த பரமன் உன்னை வெள்விடமென்று கருதியதனாலன்றோ உன்னைச் சென்னியில் தரித்தான். கொல்லுந்தன்மையில் இளம்பாம்புக்கும் முதுபாம்புக்கும் பேதமில்லாமைபோலத் தாபத்தை அதிகமாகச்செய்தலில் பிறைமதிக்கும் நிறைமதிக்கும் பேதமில்லை" என்றான்.]

## இருள்வருணனை.

410. ஆண்டப்பிறை நீங்கலும் எய்திய தந்தகாரந்
தீண்டற்கெளி தாய்ப்பல தேய்ப்பன தேய்க்கலாகி
வேண்டிற்கர பத்திரத் தீர்த்து விழுத்தலாகிக்
காண்டற்கினி தாய்ப்பல கந்து திரட்டலாகி.

இ-ள். அப்போது அந்தப் பிறை (அத்தமனமாய்) நீங்கிய உடனே, (பிறை மறையுமளவும் மறைவுற்றிருந்த) இருளானது, தொடு(தலால் உணர்)தற்குச் சுலபமானதாய்(ச் சந்தனக்கட்டைபோல) உரைத்தற்பாலனவான (பொருள்கள்) பலவற்றையும் உரைத்தற்கேற்ற (கல்லுப்போலக் கடினமான) தாய் (மரம்போல் ஈர்வாள்கொண்டு) அறுத்துவீழ்த்தற்கானதாய்ப் பார்த்தற்கு இனிமையானதாக (உருட்சி அடைந்து அழகுறும்படி) பல தூண்கள் (ஆகக் கடைந்து) திரட்டுதற்கமைவுடையதாய் (மிக இறுகிய கட்டிப்பொருள்போலத் திண்மையான தோற்றமுடையதாய்) வந்து சேர்ந்தது.

ஆண்டு - அப்போது. வேண்டில் - வேண்டுமானால். கரபத்திரம் - கைவாள் - கைரம்பம். ஈர்த்தல் - அறுத்தல்.

411. முருடீர்ந் திரட்டற் கெளிதென்பதென் முற்றுமுற்றிப்
பொருடங்கில் கேள்விச் சுடர்புக்கு வழுங்கலின்றிக்
குருடங்கி தென்னக் குறிக்கொண்டுகண் ணோட்டங்குன்றி
யருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்பதவ் வந்தகாரம்.

இ-ள். (இவ்விருளை) மரக்கட்டை அறுத்தல்போல அறுத்து (த்தூண்போல) உருட்டற்கு எளிதானதென்று சொல்வானேன்? (சிறந்த) பொருள் (—அர்த்தபுஷ்டி) பூரணமாய் முதிர்ச்சியுடையதாய்க் குற்றம்

(சற்றும்) அற்ற(நூற்) கேள்வி (ஆன்றோர்வாய்க்கேள்வி) யாகிய தீப ஒளி (சிறிதும்) உள்நுழைந்து செல்லுதற் கிடங்கொடாமல், இவ்வுலகத்திலே (குருடென்று கூறப்படுவது குருடன்று) இதுவே—இம்மனக்குருடே—(உண்மைக்) குருடென்று எடுத்துச்சொல்லுதற் கிலக்கானதாய்த் தாட்சணியம் (சற்றும் இல்லையென்று சாற்றும்படி) குறைந்ததாய் இரக்கமென்பது (இம்மியும் இல்லாது) நீங்கி ஒழிந்ததான நெஞ்சைக் காட்டிலும் கருமையானது, இந்த அந்தகாரம்.

முருடு—தறித்தமரத்தின் அடி. ஈர்தல்—அறுத்தல். குறி—இலக்கு. கண்ணோட்டம்—தாட்சண்யம்.

மனத்தில் அறிவில்லாமையும் இருளில் ஒளியில்லாமையும் கருமையெனப்பட்டன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவராய் இருமொழிகளினும் பல இனிமையும் அறிவும் ஒருங்குபொருந்திய பல உபயோகமான நூல்கள் இயற்றிய அ. மாதவையர் இவ் விருகவிகளின் அருமையை நுணுகி நோக்கித் "தமிழ்நேசன்" பத்திரிகை இரண்டாம்தொகுதி முதலாம் பகுதியில் 'தமிழ்ச்செல்வம்' என்ற தலைப்பின்கீழ் வெளியிட்டிருப்பது பின்வருவது:—

இவ் விரண்டுசெய்யுள்களிலும், கம்பர், பிறைச்சந்திரன் நீங்கியபின் உண்டாகிய இருட்டை வருணித்திருக்கிறார். ஆங்கில பாஷையிலே ஜான் மில்டன் என்கிற மகாகவி இருட்டை வருணிக்கும்பொழுது, 'தொட்டுணரக்கூடியது' என்று கூறியிருப்பதை, ("Palpable darkness") வியப்பதுண்டு. கீழ்நாட்டுக் கவிகளின் சுவபாவப்படி, நமது கம்பரோ, அஃதுடன்நிற்காது, 'வாளால்வெட்டி வீழ்த்தலாம், தூணாகத் திரட்டலாம், எளிதில் உருட்டலாம்' என்று கூறியிருக்கிறார். இஃது அவ்விருட்டின் திண்ணியதன்மையைமட்டும் குறிக்கும். அதன் கருமையையும் தனிப்படுத்தியுரைக்க வெண்ணி, கம்பர், 'நன்குவிளைந்தபொருள், நற்கேள்விமுதலிய வெளிச்சங்கள்யாவுமின்றி, குருடென்னும் பெயருக்கே தக்கதாய், கண்ணோட்டம் குன்றி, அருள் சிறிதுமே யில்லாத அறிவிலியின் வன்னெஞ்சிலும் கரியது' என்று வருணித்திருப்பது எவ்வளவு அழகாயும் சாதுரியமாயும் இருக்கின்றது.

இவ் விருகவிகளும் நளவெண்பாவில்வரும் "இளம்பேய்க்குந் தோன்று விருள்" என்றதனையும், "கருவிக்கும் நீங்காத காரிருள்" என்றதனையும்,

" அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா "

என்றதனையும் நினைவுகூரச் செய்கின்றன.

## இராவணன் இருளைப் பழித்தல்.

[அந்த அந்தகார அந்தகன் அகில உலகத்தையும் அருந்திவிட்டா னென, எல்லா உலகத்தையும் இருள் கவர்ந்துகொண்டது கண்ட இராவ ணன் 'இதுவரை இவ் விருள்விடத்தைக் கழுத்துள் அடக்கிவைத் திருந்த கண்ணுதற்கடவுள், இது வெளிப்பட்டால் உலகிலுள்ள உயிருள் பொருள்கள் உயிரில்பொருள்க ளெல்லாவற்றையும் ஒருங்கழித் தொழித்துவிடுமென்பதை உன்னாமல் அந்தோ! உமிழ்ந்து வெளியில் உலாவ விட்டுவிட்டான். *'சிங்கி குளிர்ந்துங் கொலும்' என்றவாறு விடத்தினது குளிர்ச்சியும் கொல்லுந்தன்மையும் கொண்டிருத்தலுடன் கொதிப்பும் உடைத்தாயிருத்தலால், இவ்விருள் காளவிடமூண்டு கறுத்த காலாக்கினிபோலும்' என்றான்.

## இராவணன் சீதையின் உருவெளித்தோற்றங் கண்டு உரைத்தல்.

"அம்பும் அனலும் ஊடுருவமாட்டாததாய் இறுகிய மையினும் இருண்டதாயுள்ள இந்த இருளிலே இனிய தீபம்போல ஒருபெண்ணின் உருவம் ஒளிர்கின்றது. இந்தப் பெண்ணுருப்போல, யான் சஞ்சாரம் செய்த ஏழுலகங்களினும் எந்தப் பெண்ணுருவையும் யான் இதுவரையும் கண்டிலேன். இந்த வடிவம் என் தங்கை தெரிவித்த மங்கைவடிவமே" என்றெண்ணினான்.

## இராவணன் சூர்ப்பநகையை வரவழைத்துத் தன்னெதிர் நிற்பவள் சீதைதானோவென்று கேட்க, அவள் இராமனென்னல்.

'இவள் யான் விரகவேதனையால் வருந்துதற் காற்றாளாய்த் தானே என்னைத் தேடி வந்திருக்கின்றாள். இவளுக்கு யான் செய்யும் கைம்

---

*சிங்கி - விஷம்.

மாறு யாது மில்லை. இவளைப்பற்றி, இவளைக் கண்டுவந்து எனக்குத் தெரிவித்த என் தங்கையைக் கேட்பேனாக' என்று எண்ணி ஏவலரை நோக்கிச் "சூர்ப்பநகையைக் கொணர்க" என ஏவ, அவர்கள் கூட்டிவர, "இதோ! என்முன் நிற்பவள் சீதைதானா?" என்று கேட்டான். அவள், தன் காமமிகுதியால் தனக்குத் தோன்றிய உருவெளித்தோற்றத்தின்படி, "செந்தாமரைக்கண்ணும் செங்கனிவாயும் திரண்ட தோளும் சிலையேந்திய கையும் திகழ நிற்கும் இவன்தான் இராமன்" என்றாள். இராவணன், "என்கண்ணெதிரே தோன்றுவது பெண்ணுருவம், அதனை, யான் நினைத்தலும் செய்யாத ஆணுருவமென்கின்றாய்! அறிவிலீ! உன் அறியாமை இருந்தவாறு என்னே! மனிதர்கள் மயங்க மாயவித்தை செய்பவல்ல நாம் மயங்கும்படி மனிதரா மாயை செய்வார்கள்? இது நன்றாயிருக்கின்றது" என்றான். அவள், "நீ காமாதுரனாய் அவளே நினைவாயிருத்தலால் நீ நோக்குமிடமெல்லாம் அவள் உருவெளித்தோற்றத்தைக் காண்கின்றாய். இது இயல்பே" என்றாள்.

### இராவணன் இராமனை இங்கே எவ்வாறு கண்டாய் எனச் சூர்ப்பநகை தன் காமத்தை மறைத்துச் சாதுரியமான விடை சாற்றுதல்.

இராவணன் "யான் சீதையைக் கண்டது உருவெளித் தோற்றமே ஆகுக; நீ இராமனைக் கண்ட தெவ்வாறோ?" என்றான். சூர்ப்பநகை, முன், "யான்கொண்டோடும்வண்ணம் இராமனைத் தருதி" என்று சொல்லத்தக்க சமயத்தில் துணிந்து தன் காமத்தை வெளிப்படையாகப் புலப்படுத்திச் சொல்லியவள், இதுசமயம் அது தகாதெனக்கருதித் தன் காமத்தை மறைத்துக் கூறுவாளாய், "யான் செத்தாலன்றித் தீராத துன்பமுறும்படி அவன் என்னை எக்காலம் இக்கோலம் கண்டானோ, அக்காலமுதலாக அச்சத்தால் அவனை அனவரதமும் அயர்க்காதிருக்கின்றேன்; அதனால் அவன் உருவெளித்தோற்றத்தைக் கண்டேன்", என்றாள்.

அவன், "நீ புகன்றது பொருந்தும். அதுநிற்க. எனது ஆவியையும் ஆக்கையையும் அடையப்பற்றி எரிகின்ற இந்தக் காமத்தீயை ஒழிக்க உபாயம் உளதோ?" என, அவள், "உலகமுழுவதையும் பொது நீக்கித் தனிகாக்கும் ஒரு நீ சாமானியர்போல வருந்துவானேன்? உடனேபோய் அவளைக் கவர்ந்துவருவாயாக. இதுவே உபாயம்" என்று

கூறி அகன்றாள். அவன், அறிவு அடங்கி ஒடுங்க, ஆவி நிலைகுலைய, ஆருயிர் அகன்றானோவென அயல்நின்றார் அச்சமுற மரணவத்தை பட்டுச் சாகவில்லை யென்னுமளவே ஆவிதரித்திருந்தான்.

## இராவணன் சந்திரகாந்தமண்டபம் சமைப்பித்து அதனில் அமர்ந்தும் தாபம் தணியாததாக, அமைச்சரை அழைத்து ஆலோசித்து மாரீசனிடம் செல்லல்.

மாண்டுபோன உயிர் மீண்டுவந்ததென மறதிநீங்கி நினைவுதோன்றப் 'பலபருவங்கள் நிறைமதி குறைமதி முதலிய இயற்கைப்பொருள்களால் இந்தத் தாபந் தணியாது வளர்தலால், இதனைச் செயற்கைப்பொருளாற் றணிப்பேனாக' என்று தெய்வத்தச்சனைக்கொண்டு சந்திரகாந்தமண்டபம் சமைப்பித்து அதனுள் மலர்மெத்தை விரித்த மஞ்சத்தில் வைகலுற்றான். சாளரங்களின்வழியே தண்ணெனும் தென்றல் வந்து மெல்லென வீச, அந்த மண்டபத்தின் தண்மை தென்றலின் சீதளத்தோடுசேர்ந்து விரகவெப்பத்தை மிகுவிக்க, இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் இரண்டாலும் இவ்வெப்பம் தணியாதென்றெண்ணி, வேறுயாது செய்பத் தக்கதென ஆலோசனைசொல்ல, அமைச்சர்களை அழைத்து, அவர்களிடம் ஆலோசித்து மாரீசனிடம் சென்றான்.

தவஞ்செய்துகொண்டிருந்த மாரீசன், இங்கே தனியனாய் இக்கொடியோன் யாது கருதிவந்தானென்றெண்ணி, அச்சத்தோடு இதயம்பதைக்க, இராவணனை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்து 'வந்தகாரியம் யாது?' என, "வலியற்ற மனிதர்கள், வலியுற்றவராய், உன்மருகி சூர்ப்பநகை மூக்கை அறுத்ததன்றி, அதனை அறிந்து எதிர்த்த கரனாதி உன் மருகரைக் கொன்றுவிட்டார்கள். இது உன் குலத்துக்கும் என்குலத்துக்கும் பழிக்கிடமாயுற்றதன்றோ? நீ பழிக்குப் பழி வாங்கவேண்டிய கைகளைத் தலைமேற்சுமந்து (கும்பிட்டுக்)கொண்டு தவஞ்செய்கின்றாய். மானத்தாலும் கோபத்தாலும் மனம் கொதிக்க மரணவேதனைப்படுகின்ற யான், சிறிய மனிதரோடு பொருதல் தகாதென்று, உன்உதவியால் அம்மனிதரோடு வாழும் மகளைக் கவர்ந்து, உன்மருகியின் மானபங்கத்துக்கு எதிர் மானபங்கஞ் செய்து, பழிக்குப்பழி வாங்கக்கருதி வந்தேன்" என்றான்.

இராவணன்கூறியது எரிகின்ற நெருப்பிற் காய்ச்சிய இருப்புச் சலாகையைச் செலுத்தியதுபோல இரண்டு செவிகளோடு இருதயத்தையும் எரிக்க, இகழ்ச்சியும் கோபமும் வெளிப்பட இராவணனைநோக்கி, "சிச்சீ! என்னசொன்னாய்?" என்று, அவனுக்கு அஞ்சித் திடுக்குற்றிருந்த சிந்தையைத் திடப்படுத்திக்கொண்டு மாரீசன் செப்புகின்றான்.

## மாரீசன் இராவணனை நல்வழிப்படுத்த நன்மதிகூறல்.

"மன்னர்மன்னா! மதியை யிழந்து வாழ்வைக் கெடுக்கத்தொடுத்து விட்டாய். இது உன்செயலன்று, ஊழின்செயல். உன் கோபத்தால் எனக்கு மாள்வு நேருமானாலும் அதற்கு அஞ்சாது உனக்கு வாழ்வு நீங்காதவாறு நினைந்து மனந்துணிந்து யான் சொல்வதைக் கேள். நீ நெடுங்காலம் அருந்தவஞ்செய்து பெரும்பதவி யடைந்திருக்கின்றாய். தருமநெறியினாற் சம்பாதித்த சம்பத்தை அதர்மநெறியினால் அழிக்கலாமோ? தம்மை நம்பி நட்ட அரசருடைய நாட்டைக் கவர்தலும், நல்வழியாலன்றி அல்வழியாற் குடியிறைகொள்ளலும், அயலான்மனையாட்கு ஆசைப்படுதலும் செய்வாரைத் தண்டிக்க, அவரினும் வல்லா ரில்லாரெனினும், அவர்களைத் தருமதேவதைதானே தண்டிப்பது சாதமென்று தெரிகுவாயாக இதுவரையும், யாரே, துட்டரானோர் தொலையாது நிலையாக வாழ்ந்தார்? சொல்வாயாக. கௌதமர்மனைவியைக் காதலித்த தேவேந்திரன் தேவராசாங்கத்தை யிழந்து சிறுமைப்பட்டதுபோலப் பிறர்மனைவியை விரும்பிப் பெரும்பதமிழந்து இழிந்தோர் எத்தனைபேரென்பேன். இலக்குமி ஒத்த இலக்கணம் மிக்க மனைவிமார் எத்தனைபேரோ உன் அருளை நாடியிருக்க, அவர்களைப் புறக்கணித்து அறிவுகெட்டு அயலான்மனையாளை அடைய முயல்கின்றாய்! நீ செய்யத்தொடங்கிய தீயமுயற்சியைச் செய்துதீர்த்தாலும், அவளை அடையாய், பழியைத்தான் அடைவாய். என் தாய் தாடகையையும் என் தம்பி சுபாகுவையும் உன் தம்பியர் கானுதியரையும் கொன்ற இராமனம்பால் நீ உன் குலத்தோடு மாண்டிடுவாய். இந்தத் தீய எண்ணத்தை விட்டுச் செல்வத்தோடு சிறப்பாக இதுவரை வாழ்ந்ததுபோல இனிமேலும் இனிது வாழ்வாயாக" என்றான்.

## மாரீசன் கூறியதைக்கேட்டு இராவணன் கோபிக்க, அவன் மறுபடியும் உறுதிமொழி உரைத்தல்.

இராவணன், இருபது நயனமும் எரியெழநோக்கி, "கைலைமலையைக் கண்ணுதற்கடவுளுடன் எடுத்த என் வலி எளிய மனிதர்வலிக்

கும் எளியதென்றாய். என் நெஞ்சின்நிலையை நினைத்துப்பாராது அஞ்சாமல் அவமதித்தாய். என் தங்கையைப் பங்கப்படுத்தியவரைப் பாராட்டிப் புகழ்கின்றாய். இது நீ என்திறத்தில் இழைத்த முதற்பிழையாயிருத்தலால் உன்னை ஒறுக்காது பொறுத்தேன்" என்றான். அப்போது, மாரீசன், இன்னமும் நன்மதிகூறினால், இவன் என்னை இதனினும் அதிகமாகக் கோபிப்பானென்று அஞ்சானாய், "நீ என்னைக் கோபித்தாயல்லை. உண்மையில் உன்னையும் உன் குலத்தையும் கோபித்தாய். நீ எடுத்தது கைலைமலை, இராமன் ஒடித்தது மேருமலை; அம்மலையினும் இம்மலை எவ்வளவு ஏற்றமென்பதை எண்ணிப்பார். இராமன்வலியை அறிவாயல்லை; அறிந்த யான் சொல்லியும் தெரிவாயல்லை. அவனிடம் விசுவாமித்திரன் அளித்த தேவாத்திரங்கள் சகமுழுவதையும் சிதைக்க வல்லனவாய் அவன் ஏவல்வழிநிற்பனவாய் இருக்கின்றன. உன்னை வென்ற கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்ற பரசுராமனை ஒடுக்கிய இராமன்வலிமையையொத்த வலிமை நமக்கு உளதோ? உனக்கும் உன் குலத்துக்கும் முடிவைநாடுதலே, அவன்பகையைத் தேடுதலாம். நஞ்சுண்ணத்தொடங்கினார்க்கு அயல்நின்றார் நஞ்சுண்பார் நெஞ்சுவக்க, நஞ்சுண்ணல் நன்றென்னலாமோ? அதுபோல உனக்கு உவப்பானதை உரையாமல் உறுதியானதை உரைத்தேன். நீ செய்யத்தொடங்கிய தீச்செயலைச் செய்யாதொழிவாயாக. விரகவேதனையால் மேனி மெலிந்து ஞானமிழந்து ஈனமொழிகளை இயம்பினாய். யான் உன் மாமனும் உன் குலத்து முதியோனுமாயுள்ள உரிமைபற்றி, உனக்கு இந்த உறுதி மொழிகளை உரைத்தேன். அப்பா! இப்பாதகச்செயலை அடியோடு மறந்துவிடு" என்றான்.

## இராவணன் கோபிக்க மாரீசன் இணங்கல்.

"உன் தாயைக் கொன்றவனுக்கு அஞ்சி, ஓடி ஒளித்துறைந்து உயிரைப் பேணுகின்ற நீ செத்தாரொத்தாய். உன்னையும் ஆளோடு ஆளாகச் சேர்த்தெண்ணலாமோ? திக்குயானைகளைச் செயித்துத் தேவரைச் சிறைப்படுத்தித் தேவலோகத்தைத் தீக்கிரையாக்கிச் சகமுழுதும் செங்கோல் செலுத்து மென்னைச் சிறுமனிதர் சிறுமைசெய்யுந் திறமுடையரென்று செப்பினாய். தெவ்வர் கிடையாது தினவுதின்னும் எனது திண்டோள்களுக்கு எதிரிகள் கிடைத்தலினும் இனியது

யாதிருக்கின்றது.? நீ யான் ஏவியதைச் செய்தற்பாலையேயன்றி, எனக்கு ஆலோசனை கூறற்பாலையல்லை. யான் இட்டகட்டளையை இயற்றமறுப்பையேல், என் வாளுக் கிரையாவாய். உனக்கு உயிர்மேல் ஆசையுளதேல் யான் வெறுப்பதை உரைத்தலைவிடுத்து என் குறிப்புவழி நடப்பையாக" என்றான். எனவே, மாரீசன், அடங்கி, "உண்மையாக உன் நன்மையை உத்தேசித்து உனக்கு உறுதியாயுள்ளதை உணர்த்தினேன். என் நன்மையை எண்ணி அச்சத்தினால் எதுவும் இசைத்தேனல்லேன். கெடுகாலம் கிட்டினார்க்கு நன்மை கூறினாலும் தீமையாகத் தோன்றுமன்றோ? யான் செய்டவேண்டியதைச் செப்புக'' என்றான்

## இராவணன் மாரீசனை நோக்கிச் 'சீதையைத் தருக' என்றல்.

இராவணன், மாரீசன் கூறியது கேட்டுக் கோபம் தீர்ந்து, குதூகலம் கூர்ந்து, அவனை ஆலிங்கனஞ்செய்து, "மாமா! நீ கூறுமாறு நான் ராமனம்பாற் சாதல் காமனம்பாற் சாதலினும் மேன்மையானதன்றோ? நீ செய்யவேண்டிய காரியம் சீதையை யா னடையச்செய்தலே" என, "இராமனம்புக் கஞ்சி இங்கே ஒளித்திருக்கின்ற யான் செய்யக்கூடியது யாது?" என, "மாயையால் வஞ்சித்து மைதிலியை வௌவுதல்" என, "வஞ்சித்து வௌவுதல், மன்னர்மன்னான உன்னுடைய உன்னத நிலைக்கு ஒவ்வாதது. இராமனை எதிர்த்துவென்று சீதையைக் கைக்கொள்ளல்தான் தருமநெறி. அதனால் உன் வீரப் பிரதாபத்தை மிகுவித்தவனுமாவாய்'' என, "அது தக்கதன்று, அவனைக் கொன்றால், அவள் இறந்துவிடுவாள். ஆதலால் மாயையால் வஞ்சித்து வௌவுதலே செவ்வியது" என, மாரீசன், தன்னுள்ளே, 'இந்தத் தீயோன் சீதையைத் தீண்டுமுன் இராமனம்பால் இறந்தொழிவானென்று எண்ணி, இராமனை எதிர்க்கச்சொல்லிய என் சூழ்ச்சி வீணாயிற்று. எனக்கு இறுதிக்காலம் எய்தியதுபோலும். விதியின்விளைவை எவர் அறிவார்? இவன் ஏவியதைச் செய்வதன்றி இனி வேறொன்றும் செய்தற்கில்லை' என்று எண்ணி, இராவணனை நோக்கி, "யான் என்ன மாயம் செய்யவேண்டும்?" என, அவன், "நீ பொன்மானாகி உன்னைப் பிடிக்கும், ஆசை சீதையைப் பிடிக்கும்படி செய்வாயாக" என "அப்படியே செய்கிறேன்" என்று செப்பி விடைபெற்றுச் சென்றான், இராவணனும் வேறுவழியாக ஏகினான்.]

### மாரீசன் மனநிலை.

412. வெஞ்சுற்றம் நினைந்துகும்; வீரரையே
றஞ்சுற்று மறுக்குறும்; ஆழ்குழிநீர்
நஞ்சுற்றுறு மீனின் நடுக்குறுமால்;
நெஞ்சுற்றதோர் பெற்றி நினைப்பரிதால்.

இ-ள். (தானாக மானாகச் சம்மதியாமல் இராவணன் ஆணைக் கஞ்சி மானாக மனமிசைந்த மாரீசன் இம்முயற்சியில் இறந்துபடுவேன். இனி என்) பிரியமான உறவினரை (க் காணப் பெறுவேனோவென்று அவரை) நினைந்து நிலைகுலைவான்; (இராமலக்குமணர் என்னைக் கொன்றுவிடுவாரே யென்று அவ்) வீரருக்கு அஞ்சி மறுக்கமுறுவான்; நீரில் நஞ்சுகலக்க, (அந்நீரில்) வாழும்மீன் (அந்நீரை நீங்கினாலும் நீங்காதிருந்தாலும் உயிர் போய்விடுமென்று நடுங்குதல்) போல (இராவணன் ஏவற்படி செய்தால் இராமனால்உயிர்போம், செய்யாவிட்டால் இராவணனா லுயிர்போம்என்று) நடுங்குவான். (அவன்) நெஞ்சு அடைந்தநிலைமை நினைத்தற்கே அரிது (என்னில், சொல்லுதற் கெளிதன்றென்று சொல்லவேண்டுமோ?)

வெம்மை-விருப்பம். வெம் சுற்றம்-விரும்புதற் கிடமான-பிரியமான-உறவினர். உகுதல்-நிலைகுலைதல் (தமிழ்ச்சொல்லகராதி). பெருகுதல், பெருக்கம் பெருக்கு என வருதல்போல, மறுகுதல், மறுக்கம் மறுக்கு என வரும். 'மறுக்கம்' என்பது திருவவதாரப்படலம் ௩-ம் பாட்டில் 'எற்பின்வையகம்-மறுகுறு மென்பதோர் மறுக்கம் உண்டரோ' என்பதில் வருதல் காண்க. பெற்றி-தன்மை.

இந் நீர்நிலையை விட்டுநீங்கி வேறோர் நீர்நிலையை மேவுவோமெனத் தாவி அகலமுடியாத நீர்நிலை யென்பது குறிக்க "ஆழ்குழிநீர்" என்றா ரென்னலாம். மீன் மாரீசனுக்கும் அது வாழ்கின்ற நீர் அவன் வாழ்கின்ற இராவண ராச்சியத்துக்கும், அந்நீரில் நஞ்சு உற்றது அவ்விராச்சியத்தில் 'மானாவாயாக' என்ற இராவணன் ஆணை உற்றதற்கும், அம்மீன் அந்த நீரை நீங்கமுடியாமை அவன் அவ்விராச்சியத்தை அகல முடியாமைக்கும், அது நஞ்சாலிறத்தல் அவன் இராவணனாணையால் இறத்தற்கும், அதன் நடுக்கம் அவன் நடுக்கத்துக்கும் உவமை.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

# குருபரம்பரை.

# எம்பெருமானார்வைபவம்.

[உசச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

சீராரரங்கர்வேங்கடவர்சிறந்தகருணையருளாளர்
நாராயணனுந்தென்குருங்கைநம்பிகுருகூர்நம்மாழ்வார்
பாரோர்புகழுநாதமுனிபத்தர்புகழுமாளவந்தா
ரோரார்பெரியநம்பிதிருக்கோட்டிநம்பியெழின்மிக்க. (கருஉ)

திருமலைநம்பிதிருமாலையாண்டான்சீரார்திருவரங்கப்
பெருமாளரையரிவரன்றிப்பிரமநூணர்ந்தபிசாசுமை
குருமாமணியாமெதிராசர்குலவுமேன்மைவெளியிட்டார்
அருமாமறையின்முதலாநம்பெருமாள்வெளியிட்டவைதெளியில். (கருங)

சீராருளாளப்பெருமாளுடனேதர்க்கஞ்செய்தெழுநா
ளாராவமுதத்திருவாக்காலவனைபிதனுல்வெல்லென்ன
வேரார்வேதமுடிவையெடுத்திசைத்தலாலுமெம்முடைய
நோமுபயவிபூதியையுமினக்கேதந்தோமெனலாலும். (கருச)

எந்தைதிருவேங்கடத்துறைவான்வெளியிட்டவைதானென்னெனிற்
பந்தங்கடிந்தவெதிராசர்பத்தரோடுந்தொழுதெழுநாட்
டந்தோமுபயவிபூதியையுந்தெற்குவீட்டிற்றுனிருந்து
மூந்தவின்னம்வேண்டுவதைமொழிகவென்னமொழிந்தமையால். (கருரு)

அருளாளர்வெளியிட்டபடியறையிலாங்கொருநாட்
டெருளார்ந்தபாகவதத்திரளோடுமோலக்க
மருளார்ந்தவுலகினிடர்மாய்ந்தறவாங்கிருந்தனனப்
பொருளார்ந்தசிந்தையுறும்பூசுரர்கணிலைகாண்பான். (கருசு)

வேறு.

இருந்துநம்மிராமானுசன்றனையுடையார்வருகவென்றிசைத்தனனிசைப்ப
வருந்தவமுடையதேசிகர்பலருமணைந்தனராங்கதைமதியார்
திருந்தியபெரியநம்பிதன்மரபிற்சிலரதையிசைவுறநோக்கிக்
குருந்தினிலமர்ந்தானீங்கணுமழைப்பக்கோதறுநிலையினீர்விரைவில். ()

வேறு.

வாராதிருந்தபடியென்கொலென்றுநம்பிமைந்தர்களுஞ்
சீரார்முகிலேயெதிராசன்சீடனன்றேயெமக்கென்றார்
காரார்வண்ணனதுகேட்டுக்கமலையுடனுங்குறநகைத்துப்
பாராணீகித்தசாதர்நற்பரிந்தசிந்தைவசுதேவர். (கருஅ)

ஆதியோர்கணமைப்புதல்வனாகநினைத்தல்போலந்த
நீதியோனைச்சீடனெனநீங்கணினைத்தலெனவுரைத்தச்
சோதிமுகின்மற்றுங்கொருநாட்டுலங்குங்கிடாம்பியாச்சானும்
பேதியாதசிந்தையனையழைத்துப்பின்முன்னுணர்ந்தோனே. (௯௫௯)

ஒன்றுசொல்லிக்காணென்னவுரைத்தானவனுமெதிராசன்
மன்றல்கமழுந்திருத்தாள்களிரண்டுமன்றிமறைமுதலே
யொன்றுமறியேனடியேனென்றிசைத்தானதுகேட்டின்புற்றுக்
குன்றமெடுத்தானுடையவரையுடையையாகக்குறித்திருந்தும். (௯௬௦)

கூறுநின்றங்லைகள்பலகற்றுயதிலேகுறித்திவனைத்
தேறுதொன்மறைவேறாகச்செப்பியல்லாக்கதிகளிலே
போறுயோவென்றறிவதற்காய்க்கேட்டேனென்னப்புகறலினு
லாரூர்சடையான்றெழுநம்பிவெளியிட்டதுதானுங்கவனே. (௯௬௧)

வேறு.

தேசிகனுகக்கொண்டுசெப்பியவிதத்தைக்கேட்டுப்
பேசியவெதிநாதன்னெம்பிரானெனவிருத்தலாலும்
வாசமார்பொழில்சூழ்நீதிவண்குருகூரின்மாற
னுசறவெளியிட்டானென்றிசைத்ததுமறையனுற்றும். (௯௬௨)

வேறு.

உலகமனைத்துந்திருத்துதற்கென்றுதித்திங்குலகமளந்தவனே
நிலவுமுயிர்களனைத்தினுக்குநின்கண்வேட்கையெழுப்பிடுவ
னலகிலாதமாமாயாயானென்றேறறட்டவனெதிரே
பலவுங்கூறிமார்தட்டிப்படியைத்திருத்தப்பார்த்தளவில். (௯௬௩)

மாபாவத்தில்விழுந்துலகமாறுபாடாயிதமருளுங்
கோபாலக்கோளரிதன்னைமறந்திட்டுழல்வோர்கொடுந்தொழில்கண்
டேபாவம்பரமேயென்றுங்கிருந்துவருந்திக்கிலேசித்துச்
சீபாதங்கொண்டவதரித்தார்திருத்தப்படாதசிலுகுலகை. (௯௬௪)

வேறு.

இன்றெமக்குத்திருத்துதற்கிங்கிசையுங்கொல்லெனநொந்தாங்
கன்றுமுதற்கைவாங்கியச்சுதன்முனன்பினெடுஞ்
சென்றுநின்றென்சிந்தனையும்யானுமேதீர்ந்தொழிந்தோங்
குன்றெடுத்தாயெனவுலகின்கொடுமைகண்டுகூறினன். (௯௬௫)

கூறினன்காலமூன்றையுமுணருங்கோதறுஞானியாதலினல்
மாறியவுலகுக்கிரங்கினனினிமேல்வருவதோர்காலத்தைப்பார்த்தா
னூறியஞானியுடையவர்மண்ணிலுதிப்பதையுணர்ச்சியினேக்கித்
தேறுமின்கலியுங்கெடுமினியுயிர்காளெனத்திருவாய்மொழிசெய்தான். ()

நாதமுனியுடையவரைவெளியிட்டபடிநவில்வில்
வேதமருந்தமிழ்செய்தவிமலனைப்போன்மெய்ஞ்ஞானப்
போதவிழியுடையவனுய்ப்புகுங்காலமுறநோக்கி
யேதமறுமெதிராசனெய்துதலைச்சிந்தித்தே. (கசுஎ)

பெருகாநின்றவருண்மாறனல்கப்பெற்றபொருட்கினிமேல்
வருகாலத்திலெதிராசனிலக்காமற்றையவனென்றே
டொருகாலத்திலாயிலனென்றுருகிப்பொருவில்போற்றை
யருகாநின்றகுளப்படியிற்றேக்கிற்குருவிகுடித்தளரும். (கசுஅ)

வீரநாரணப்பேரியினிற்றேக்கினுடுவிளைந்திடுமென்
றூராவன்பினருள்செய்தானந்தவேரியுடையவராய்
நேராய்க்குறித்தன்றுரைத்தமையானிகரிலாதவெதிராச
னேரார்குளமாயிடும்படியீங்கெவணமென்னிலிசைக்கின்றேன். ()

வேதமுதனம்பெருமாண்மெய்ஞ்ஞானவாரிதியாய்ப்
போதமிகுமாழ்வார்கள்புகுந்துமுகந்தெழுமுகிலாய்
நாதமுனியெனும்பொருப்பிற்றமிழ்வேதமெனுநாமத்
தோதருஞ்சீரானந்தமழைபொழியவுலகனைத்தும். (களo)

உய்யக்கொண்டார்மணக்காலநம்பியென்னுமோங்கருவி
யையவிழியத்தாழ்வரையிற்படியிலாளவந்தாரா
மெய்கொளாறுமிகப்பெருகமிக்ககுரவரெனுங்காலா
லையனெதிகடனிநாதன்குளமாய்ப்பெருகியலையெறிந்தே. (களக)

மற்றவனருளிலாண்டமாசறுகுரவரெல்லா
முற்றசீர்மடைகளாகவுலகெலாந்திருத்தியாங்கே
நற்றவம்விதைத்துஞானபோகமேவிளையநாளுங்
கொற்றவற்காறிலொன்றுங்குடிகளுக்கஞ்சுமாக. (களஉ)

ஆனந்தபாரபோகமகலிடத்தில்விளைதலினால்
வானந்தநிலைகண்டநாதமுனிவண்புகழ்சேர்
மோனந்தர்தொழுதேத்துமெதிராசன்றனைமுறையாற்
றானந்தழாதியுருவேரியெனச்சாற்றினான். (களங)

வேறு.

அந்தவாறுநிற்பவாளவந்தவெங்கைதையயனை
யெந்தவாறுகண்டுதெய்வமென்றதென்ன*வேண்டிடின்
†முந்தநாளிலன்பரோடுமெய்தியந்தமுத்தனை
யிந்தமானபாவனம்மதத்திலவந்திசைந்தநாள். (களச)

---

[பி—ம்.] *வெண்ணிடின் ; வென்றிடின். †முந்தைநாளில்.

ஏதுசெய்திடானிம்மெய்யனென்றசொல்விருத்தலா
லோதுபஞ்ச*தேசிகர்க்குண்முன்பனந்தவும்பனைக்
கோதிலாதநித்தனென்றுகொண்டதெங்கனென்றிடிற்
போதமிக்கநம்பியத்துழாய்தனோடுபுக்கொர்நாள். (௩௭௫)

இருந்தனன்னிருந்தகாலையெந்தைபூதூர்வள்ளலுந்
திருந்துதொண்டர்தங்களோடுதேசிகற்பணிந்திடப்
பொருந்தினனவன்பதத்தினம்பிபுக்கிறைஞ்சினன்
அருந்தவத்தின்மிக்கதொண்டராத்துழாய்தன்னோடுமே. (௩௭௬)

மாசிலாதபூதூர்வள்ளன்மாதவத்தியாயினும்
†தேசிகற்கடுப்பதோசிரத்தினாலிறைஞ்சலென்
றூசிலாதநம்பியோடுமன்பர்கூறநம்பியும்
நேசமிக்கதொண்டர்கேண்மினென்றுமேனிகழ்த்துவான். (௩௭௭)

பண்டரங்கர்‡தம்பியின்றுபத்தரோடுமெய்தலுங்
கண்டபோதிலென்னையாளவந்தகாதலாளனார்
தொண்டரோடுமெய்தினாரெனத்துணுக்கமெய்தியப்
புண்டரீகபாதபோதிலாவிசென்றுபுக்கதே. (௩௭௮)

என்றுரைத்துமைந்தர்சீரிலங்குபுண்டரீகரை
யன்றெதிக்குநாதனாடித்தொழிற்குரித்தனா
யின்றுதொட்டும்வாழ்கவென்றுநம்பியன்றிசைத்தலாற்
குன்றமன்னமாடநீடுகோட்டியூர்நன்னம்பியும். (௩௭௯)

எந்தைபூதூர்வள்ளலாரையேற்றமாகயாரினுஞ்
சிந்தையுள்ளுணர்ந்துமுன்புசெப்பலேதினாலெனில்
இந்தவுண்மையென்றனுணையீயலைபிறர்க்கென
முந்தவாணை§பிட்டவன்மொழிந்தமந்திரந்தனை. (௩௮0)

உற்றதொண்டர்கட்கெலாமுரைப்பநம்பியொன்றுரும்
பற்றிலானையன்றுகூவியென்றனாணைபாழ்படப்
பெற்றதென்னுனக்குமின்றுபேசுகென்றுபேசலுங்
கற்றபூதூரெந்தையையநாகமென்றுகழறுநாள். (௩௮௧)

ஈதறிந்திருந்துசொன்னதன்பொருட்டினாலதை
யோதுகென்றுநம்பியோதவுண்மைகேட்டயாவருந்
தீதிலாதவீடுசேர்வர்தேவநானொருத்தனே
பேதமுற்றரிரயவங்கிபெறுவனென்றுபேசலும். (௩௮௨)

நம்பிபல்லுயிர்க்குநீகொல்நாதனென்னவோதியன்
றெம்பிரானையன்பினாலெடுத்தணைத்துமெய்ம்மையாய்
வம்புலாவுதாமரைக்கண்மாயனார்தமார்க்குமும்
இம்பராலுன்மார்க்கமென்னவின்றுதொட்டுவேண்டுமால். (௩௮௩)

---

[பி-ம்.] *தேசியர்க்குண். †தேசிகர்க். ‡நம்பி. §பிட்டவண்.

## வேறு.

எனவுரைத்துத்தன்புதல்வனெழிறிகழ்தெற்காழ்வானை
மனமகிழ்ந்தக்கிங்கரியமுடையவர்சீர்மலரடிக்கீழ்த்
தினமுமினிப்பயில்கவெனச்செப்பினனதுநிற்ப
வினவருஞ்சீர்த்திருமாலையாண்டான்முன்வெளியிட்ட. (௧௮௪)

படியெவணமெனிற்றிருவாய்மொழிக்கத்தம்பகர்பொழுதி
லடிகளருளாளவந்தாரகத்துதித்தவத்தமிந்தக்
கடிமகழ்பூம்பொழிற்பூதூர்க்*காதலர்க்குத்தோன்றுதலால்
நெடியவன்சிரவதாரமிதுவுமொன்றுமெனநினைந்தே. (௧௮௫)

தெண்டனிட்டுப்புதல்வனையுஞ்சிறந்திலங்குமெதிபதிக்குத்
தொண்டனாய்வாழ்கவெனச்சுந்தரத்தோளுடையானை
யண்டர்தொழுந்தலைவனிடையாசரிப்பித்தனனதனாற்
கொண்டலமர்பெரியதிருமலைநம்பிகுணமிக்க. (௧௮௬)

எதிராதன்றனைவெளியிட்டிசைத்தபடியெவணமெனின்
மதியானன்வேங்கடத்தின்மாயவனைத்தொழப்புகுநாட்
டுதிசூழ்ந்தபுகழ்நம்பிதொண்டரொடுமெதிர்கொண்டு
நிதிதழைக்கும்பரிவட்டப்பாறையினினேர்படவும். (௧௮௭)

சீராரெதிகடனிநாதன்சிறந்தநம்பிதனைநோக்கி
யாராவன்பின்மிக்கவனேயடியேற்கெதிரேயொருசிறியோன்
வாராநின்றிலமையாதோநீயோவருவதெனவணங்க
வேரார்நம்பியெதிநாதவெழிலார்திருவேங்கடப்பதியில். (௧௮௮)

கோலமிக்கவுனக்கெதிரேவிடுப்பக்குறித்தோர்சிறியோனை
நாலுதெருவுமாராய்ந்துநாடிப்பார்த்தேனொருவரெனைப்
போலுஞ்சிறியோர்கண்டிலனாக்கதனாலெதிரேபுறப்பட்டேன்
பாலுந்தேனுஞ்செழுங்கனியுமனையாயெனமுன்பகர்ந்ததற்பின். ( )

## வேறு.

தன்னுடைப்புதல்வன்றிருமலைநம்பிதன்னையுமுடையவரடியின்
முன்னவைத்தெம்பார்தன்னையுந்தானம்வழங்கியசதிரிலரையர்
என்னுயிர்த்துணையாமெதிபதிதன்னைவெளியிட்டபடியினையம்பின்
முன்னவரிடத்திலியமுனைத்துறைவார்மொழிந்திவற்காகவைத்தருளும். ( )

உண்மையைப்பெறுதற்குபாயமிட்டரையருளமுவர்திருநெடும்பணிகள்
திண்மையிற்செய்யவரையருநீயென்சிரியசருவசொத்தினையும்
வண்மையில்வாங்கும்படிநினைந்தேகொல்மாசறுமெதிபதியாமப்
பண்ணமர்கலைகள்வல்லவொள்ளியனேபகர்கவெந்நினைவினையுன்னி. ( )

[பீ-டு.] *காதலற்குத்,

மஞ்சளரைத்தநீராட்டிமகிழ்வித்தாயின்றெனத்தனக்குத்
தஞ்சமாகமுன்பிருந்தசதுச்சுலோகந்தோத்திரமென்
றெஞ்சலில்லாவடமொழிகளெல்லாம்பொருளோடெதிபதிக்கு
நெஞ்சங்களிப்பக்கட்டுரைத்தானதனுலந்தநெறிகிடப்ப. (௧௧௨)

பேசருமெதிகள்வாழ்வைப்பிரமாக்கதன்முன்னுளிற்
றேசுறவெளியிட்டானுங்கெவணமென்றதுவுஞ்செப்பி
லாசிலாச்சோழன்பெற்றவாயிழையிடத்தின்மன்ன
மாசறுமதனைப்போக்குமந்திரவாதியாக. (௧௧௩)

எண்ணியாங்கெய்திநின்றயாதவப்பிரகாசற்குப்
புண்ணியசித்தர்தம்மிலொருத்தனிப்புனிதனியுந்
திண்ணமாயறிதியென்னச்செப்பியதிறத்தாலன்றி
யுண்ணினைவுடையவூமையுரைத்ததுமுரைக்கலுற்றேன். (௧௧௪)

கண்ணன்கமலையுடன்வளருங்காஞ்சிபுரத்திலவனருளி
னண்ணும்பாகவதத்திரளினவையிலாதாங்கோர்மதலை
யெண்ணுந்திறத்தாலூமையெனவிருந்தானஞ்சுவபதளவுந்
திண்ணமதற்பின்மூவாண்டு*தேசத்தெவருங்காணுதே. (௧௧௫)

மறைந்துவைகிவயதெட்டில்வந்தானந்தத்திருநகரில்
உறைந்தமேலோர்கண்டுவப்பாலூமையெங்கேயொளித்தனையுன்
றறைந்தாரறையவவ்வூமையாங்கேயவர்க்குவாய்திறந்து
நிறைந்ததிருப்பாற்கடற்கிடந்தநெடுமாலருகேமூவாண்டும். (௧௧௬)

இருந்துவந்தேனிப்பொழுதிங்கென்னவிசைப்பமற்றவர்நீர்
பொருந்துதிருப்பாற்கடலுதன்பொருவிறிருவோலக்கத்திற்
றிருந்தும்வாய்மையென்னதனைச்செப்பாயென்றாரப்பாலன்
கருந்தண்முகிலைப்பழித்தவுருக்கமலம்பழித்தகண்கைகால். (௧௧௭)

திருமாற்கினியவனந்தாழ்வான்றேவர்மகிழப்பல்லுயிர்க்கா
யிருமாநிலத்திலிளையாழ்வானென்னத்தோன்றியாவரையும்
அருமாநரகிற்புகலொழித்தாங்கமலனுதிப்பிரான்றன்னை
யொருமாநொடியும்பிரியாதேயுறைகின்றானென்றுரைக்கின்றார். ()

†என்றுனிவணமனந்தம்பேரொதிகளுதன்றனைவெளியிட்
டன்றாங்கறைந்தாரதுகிற்பவவன்றன்றிருத்தாள்களைகண்ணுய்
நின்றுங்கோங்குந்‡தேசிகர்கணினைவுமவர்கடிருத்தாளிற்
சென்றாசரித்தார்க்குறுநியவர்செப்புந்திறமுஞ்செப்புவாம். (௧௧௧)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.

[பி-ம்.] * தேசத்தவருங் † என்றாரிவண. ‡ தேசியர்க.

உ

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[௫௯௯-ம் பக்கத்தொடர்ச்சி.]

**415-வது சூத்திரம்:—வினையின் றொகுதி காலத் தியலும்.**

இச்சூத்திரத்தின்பொருள் :—

உரையாசிரியர் :—வினைச்சொல் தொகுங்கால், காலந்தோன்றத் தொகும் எ - று.

சேனாவரையர் :— வினைத்தொகை காலத்தின்க ணிகழும் எ - று.

நச்சினார்க்கினியர் :—வினைச்சொல்லினது ஈறாய்த் தொக்குநிற்கும் எழுத்துக்கள் காலத்தின்கண்ணே தொக்குநிற்கும் எ - று.

தெய்வச்சிலையார் :—வினையின்றொகுதி காலச்சொல்லோடே நடக்கும்.

'காலத்தியலும்' என்றதற்குக் 'காலச்சொல்லோடே நடக்கும்' என்று தெய்வச்சிலையார் கூறும் பொருள் தெளிவாயுள்ளது.

'வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல' (தொல். சொல் 413.) 'உவமத் தொகையே உவம வியல' (தொல். சொல். 414) என்ற சூத்திரங்களில் 'வேற்றுமைத்தொகையே', 'உவமத்தொகையே' என்ற சொற்கள்போல் இங்கும் காலத்தொகையே என்று சொல்லாது வினையின் றொகுதி என்று சொன்னதற்குக் காரணம் யாதெனின் 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது—நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' (தொல். சொல்.-198) என்றவிடத்து வினையென்பது காலவெழுத்தைப் பெற்றதே என்று வினையின் இலக்கணம் கூறியிருத்தலாலும், காலத் தொகை எனின் தொழில் உணர்த்துமென்பது பெறப்படாதாகையாலும் என்க.

உரையாசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் இவர்கள் மதம், கொன்ற யானை, கொல்லாநின்ற யானை, கொல்லும் யானை : இவை கொல் யானை என்று தொகும் என்பது.

சேனாவரையர் அவ்வாறுகூறாது கொல் என்ற தாதுவும் யானையும் சேர்ந்து கொல்யானை என்றாகிக் காலத்தையுணர்த்துமென்றும், 'அவ்வினை விரிந்துநின்றவழித் தோன்றாது தொக்கவழித் தொகையாற்றலாற் காலந்தோன்று மென்றும்' கூறுகின்றனர். இங்குத் தொக்கவழி என்பதற்குச் சேர்ந்துவரும்வழி என்பது பொருளாகும். இவ்வாறுகொள்ளுவதற்குப் பிரமாணம் 'செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின் — மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும்....புணரிய நிலையிடை யுணரத் தோன்றா' (தொல். எழுத். 482) என்ற சூத்திரத்திலுள்ள 'செய்யும்.... புணரிய நிலையிடை யுணரத் தோன்றா' என்ற வாக்கியம் என்றும், அவ்வாக்கியத்தால் பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர்கருத்தன்று என்றும் கூறுகின்றனர். அச்சூத்திரத்தால் வினைத்தொகையிற் பெயரெச்சமும் பெயரும் புணரும்போது, உலகத்தில் வழங்குமாறு கொள்ள வேண்டுமேயன்றி, புணரியல்விதிகளைக் கொள்ளக்கூடாது என்பது பெறப்படும் என்பதே உரையாசிரியர்கருத்து. அதே மேலானது என்று தோன்றுகின்றது. மேலும், கொல் என்னுந் தாது யானை என்றபெயரோடு எவ்வாறு அந்நுவயிக்கும்? வடமொழியில் 'தேவார்த்தம்' (தேவாய—ம் 'கும்பகார:' (கும்ஹகார:)முதலிய சொற்களை நித்திய ஸமாசனாகக் கொண்டதுபோல, இங்கும் கொல்யானை முதலியவற்றைச் சேனாவரையர் நித்தியஸமாஸனாகக் கொண்டனர்போலும். மேலும், இச்சூத்திரத்தில் வினை என்பது தாதுவென்றும், அது தொழின்மாத்திரம் உணர்த்துகிறதென்றும், அப்போது அது தொழிற்பெயர் என்பது ஆசிரியர்கருத்தென்றும் அவர் கூறுவது பொருந்துமா? என்று ஆராயத்தக்கது. நட, கொல் முதலிய தாதுக்களைப் பெயர் என்று கொள்ளுவதற்குச் சேனாவரையர்கூறும் ஓ நகாரணம் பின்வருமாறு:—'முதலிற்கூறுஞ் சினையறி கிளவியும்...இருபெயரொட்டும்' (தொல். சொல் 114) என்ற சூத்திரத்தில் இருபெயரொட்டை ஆகுபெயராய்க்கூறியிருத்தலாலும், இருபெயரொட்டு அன்மொழித்தொகையே குறிப்பதாலும், அவ்வன்மொழித் தொகைக்குள் வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை

ஒன்றுதலானும் என்பதே. இருபெயரொட்டு அன்மொழித்தொகையைக் குறிக்கவில்லையென்ற தெய்வச்சிலையார்கொள்கையைக் கொள்ளின் சேனாவரையர்கூறியவாறு கொள்ளவேண்டாம்.

இச்சூத்திரவுரையில் தெய்வச்சிலையார் மிகத் தெளிவாய்க்கூறியிருப்பதைக் காண்க. அதாவது:—'வினைச்சொல்லாவது தொழிலுங் காலமும் பாலும் உணர்த்தலின், பாலுணர்த்துஞ்சொல் முற்றுச்சொல்லாகி நின்று தொகைநிலையாகாமையானும், பால்காட்டாத வினையெச்சம் பெயரெச்சம் என்னும் இரண்டினுள்ளும், வினையெச்சம் முற்றுவினைச்சொல்லோடல்லது முடியாமையானும் ஈண்டுத் தொகுவதும் விரிவதும் பெயரெச்சம் என்று கொள்க. அத் தொகுங்காலத்துக் காலப்பொருளை யுணர்த்துஞ் சொல்லே தொகுவதும் விரிவதும் என்று கொள்க. தொழிலும் பொருளும் விட்டிசைத்து நில்லாது ஒற்றுமைப்பட்டதனை வினைத்தொகை யென்றார்' என்பது.

நச்சினார்க்கினியர், 'வினையென்றது உண், தின் முதலிய முதனிலைகளை. அவை ஈண்டும் ஆகுபெயராய்த் தன்னாற் பிறந்த பெயரெச்சத்தை உணர்த்தின' என்று கூறினர். பெயரெச்சம் வினையியலுள், கூறப்பட்டதாலும், அது தொழிலையுங் காலத்தையும் காட்டுவதாலும், அப்பெயரெச்சத்தைப் பெயரால் ஏன் வினையென்று கொள்ளவேண்டும்?

வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்
416-வது றன்ன பிறவு மதன்குண நுதலி
சூத்திரம். யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—பண்பு தொகுமிடத்து இந் நான்கும்பற்றித் தொகும் என்பது கருத்து.

சேனாவரையர்:-வண்ணம் வடிவு அளவு சுவை என்பனவும் அவை போல்வன பிறவுமாகிய குணத்தை நுதலிப் பின்னோக்கவழிக் குணச்சொற் குணமுடையதனை யுணர்த்தலான் இன்னதிது வென ஒன்றனை ஒன்று விசேடித்து இருசொல்லும் ஒருபொருண்மேல்வருமியல்பை யுடைய எல்லாத்தொகைச்சொல்லும் பண்புத்தொகையாம் எ-று.

நச்சினார்க்கினியர்:—ஒருபொருட்குப் பொதுமை உள்வழி இப்படியிருப்பது இப்பொருளென்று அதனை விசேடித்துக்கூறும்படியாகப் பின்வருகின்ற அப்பொருளின் குணத்தைத் தான் கருதி அப்பொருட் குணமாகிய வண்ணத்தின்கண்ணும் வடிவின்கண்ணும் அளவின்கண்ணுஞ் சுவையின்கண்ணும் வரும் இயல்பாகிய கிளவியும் அவைபோல்வனபிறவு மென்று சொல்லப்பட்டு வருங் கிளவியும் எத்தன்மையவாகிய சொற்களும் பண்புச்சொல் தொக்க தொகையாம் எ - று.

தெய்வச்சிலையார்:—வண்ணம், வடிவு, அளவு, சுவை யென்பனவற்றினும், அத்தன்மைய பிறவுமாகி ஒருபொருளினது குணத்தைக் கருதி இன்னது இது என ஒன்றையொன்று விசேடித்து வரும் இயல்பினையுடைய எல்லாச்சொல்லும் பண்புத்தொகையாம் எ-று.

சேனாவரையர், 'இயற்கையென்றது, தொக்குழிப் பண்புடையதனைக் குறித்தல் அத்தொகைச்சொல்ல தியல்பென்பதல்லது காரணங் கூறப்படாதென்றவாறு' என்றும், 'பண்புத்தொகையும் வினைத்தொகை போலப் பிரிக்கப்படாதாம்' என்றுங் கூறுவதால், சூத்திரத்திற்குப் பொருள்கூறுமிடத்து 'பின்றேக்கவழிக் குணச்சொற் குணமுடைய தனையுணர்த்தலான்' என்று வருவித்துக்கொண்டனர். நச்சினார்க்கினியர் சூத்திரப்போக்கின்படி அந்நுவயங்கொள்ளாது 'இன்னது இது என அதன்குணம் நுதலி வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையின் வரூஉம் இயற்கைக் கிளவியும் அன்ன பிறவு மென்று வரூஉங் கிளவியும என்ன கிளவியும் பண்பின்தொகை' என்று அந்நுவயங் கூறுகின்றனர். இவ்வாறு கூறின் 'இன்னது இது என அதன்குணம் நுதலி' என்பதற்குப் பொருள் நேரில்லாததோடு, பண்புச்சொற்களே பண்புத்தொகை என்று பெறப்படும். அது பொருந்தாது.

உரையாசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் இவர்கள் மதத்தில், கருங்குதிரை என்பதற்குத் தொகைவிரி கரியதுகுதிரை என்பதே. சேனாவரையர் 'பண்புத்தொகையும் வினைத்தொகைபோலப் பிரிக்கப்படாதாம்' என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது 'இன்னது இது' என்று சூத்திரித்த ஆசிரியர் தொல்காப்பியனாருக்குச் சம்மதமின்று என்று நச்சினார்க்கினியர் சேனாவரையரை மறுக்கின்றனர். மேலும், '....உயர்திணை யஃறிணை யாயிரு மருங்கி—னைம்பா லறியும் பண்புதொகு

மொழியும்....' (தொல் எழுத். 182) என்னுமிடத்து ஐம்பாலறியும் என்றசொல் பண்பு என்ற சொல்லை விசேடிப்பதால்* சேனாவரையர் மதம் எவ்வாறு பொருந்தும்.

இச்சூத்திரவுரையில் தெய்வச்சிலையார் 'வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை என்பன தம்மியல் ஒருபுடை ஒப்புமையுடையவாதலிற் பாணினியார் தற்புருடசமாசம் என்று குறியிட்டார்' என்று கூறியிருப்பதைக் காண்க.

பாடபேதம்:—இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் இம்மூன்றிலும் 'சுவையினென்று' என்ற பாடம் சூத்திரத்து முதலடியில் உள்ளது. தெய்வச்சிலையார் உரை கொண்ட புத்தகத்தில் அதற்குப் பிரதியாக, 'சுவையின்' என்றே உள்ளது.

இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் 225-வது பக்கத்தில் 'ஒழிந்த வினைத்தொகையும்' என்பதற்குமேல் 'பண்புத்தொகையும்' என்பது சேர்க்கப்படவேண்டுமென்று தோன்றுகிறது. இளம்பூரணத்தில், 'சுகரக்கிளவி, அகரமுதல...என இவையுங் கொள்க' என்றுள்ளது. அகரமுதல் என்பது அகரமுதல் என்றிருப்பின் நலம்.

சேனாவரையத்தில் 'முதனிலையாவது, கரியன், செய்யன்...முதனிலையாய்....' என்ற பாடம் உளது. இங்கு முதனிலையாவது என்பதற்குப் பிரதியாகத் தனிநிலையாவது என்றிருக்கவேண்டும். இதற்குக் காரணம் 'அச்சொல் தனிநிலையாய் உண், தின்...என்பனபோலப் பொருளுணர்த்தாமையின்' என்ற வாக்கியத்தை நோக்கின் நன்கு விளங்கும்.

இருபெயர் பலபெய ரளவின் பெயரே
417-வது யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
சூத்திரம். யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே.

இச்சூத்திரத்திலுள்ள இருபெயர், பலபெயர் என்ற சொற்களுக்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் இரண்டு பெயர், பலபெயர் என்று பொருள்கொண்டனர். அவ்வாறாயின் பலபெயருக்குள் இருபெயரும் அடங்குவதால் இருபெயர் என்ற சொல் சூத்திரத்தில் எற்றுக்கு என்று ஆசங்கித்து, உரையாசிரியர் 'இரண்

* விசேடிப்பது=விசேஷணம். விசேடிக்கப்படுவது=விசேஷ்யம்.

டனையும் பன்மையென்றுவேண்டான் இவ்வாசிரியன் என்பது' என்றும், சேனாவரையர் 'வேற்றுமைத்தொகை முதலாயின பலசொல்லாற்றொகுதல் சிறுபான்மை; அதனான் உம்மைத்தொகை இருசொல்லானும் பல சொல்லானும் ஒப்பத் தொகுமென்பது அறிவித்தற்கு இருபெயர் பல பெய ரென்றார்' என்றும், நச்சினார்க்கினியர் 'இரண்டாகிய பலபெயரினும், இரண்டிறந்த பலபெயரினுந் தொகுமென்பதற்கு இருபெயர் பலபெயர் என்றார்' என்றுங் கூறினர். தெய்வச்சிலையாரோ இருபெயர் என்பதற்குப் பொருட்பெயரும், தொழிற்பெயரும் என்றும், பலபெயர் என்பதற்குப் பன்மைகுறித்தபெயர் என்றும் பொருள்கூறி, இருபெயருக்கு உதாரண மாகக் கபிலபரணர், ஆடல்பாடல் என்றும், பலபெயருக்கு உதாரண மாகப் பார்ப்பார் சான்றார் என்றுங் கூறினர். கபிலனும் பரணனும் என்பது தொகையாம்போது கபிலன் என்றசொல்லின் இறுதி னகரம் கெட்டுக் கபிலபரணர் என்றாவதுபோல், பார்ப்பனரும் சான்றாரும் என் பது தொகையாம்போது பார்ப்பனர் என்பதின் இறுதி ரகரம் கெடாது பார்ப்பனர்சான்றார் என்றாவதால், பலபெயர் என்பதற்குள் இருபெயர் என்பது அடங்காது*எனக் கருதுகின்றாரென்று தோன்றுகின்றது.

பாடபேதம்:—சைவசித்தாந்தக்கழகச் சேனாவரையப்பதிப்பில், சூத்திரத்தில், பல்பெயர் என்றும், மற்றப்பதிப்புக்களில் பலபெயர் என்றும் உள்ளன. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் உரையில் பல சொல்லாலும் என்றுளது. தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பில் பல சொல்லானும் என்றுளது.

பண்புதொக வருஉங் கிளவி யானு
418-வது மும்மை தொக்க பெயர்வயி னானும்
சூத்திரம். வேற்றுமை தொக்க பெயர்வயி னானு
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே.

---

*வடமொழியில் ப்ராஹ்மணஸ்ய வைஶ்யஸ்ய என்பதும் ப்ராஹ்மணாஸ்ய வைஶ்யாஸ்ய என்பதும் ஒரேவிதமாக ப்ராஹ்மண வைஶ்யா: என்று தொகுமாறு தமிழில் இல்லை. பார்ப்பனனும் வைசியனும் என்னுமிடத்துப் பார்ப்பனன் என்பதனின் இறுதி னகரங் கெட்டுப் பார்ப்பன வைசியர் என்றும், பார்ப்பனரும் வைசியரும் என்றவிடத்துப் பார்ப்பனர் என்பதின் இறுதி ரகரங் கெடாது பார்ப்பனர் வைசியர் என்றும் தொகையாகும் என்ற நுண்ணிய வேறு பாட்டையறிந்து கூறுகின்றனர் தெய்வச்சிலையார் என்று தோன்றுகின்றது.

இச்சூத்திரத்திற்குப் பொருள் உரைகாரர் நால்வரும் ஒரேவிதமாகக் கூறியுள்ளார்.

சூத்திரத்தில் வேற்றுமைத் தொகையை முற்கூறாது பண்புத் தொகையை முற்கூறியதனால் 'ஒழிந்துநின்ற உவமத்தொகையும் வினைத்தொகையும் பற்றிப் பிறக்கும் அன்மொழித்தொகை என்பது' கொள்ளப்படுகின்றது என்பது உரையாசிரியர் மதம். சேனாவரையர் 'பண்புத்தொகைநிலைக்களத்துப்பிறத்தல் பெரும்பான்மையாகலின், முறையிற்கூறாது அதனை முற்கூறினார்; வேற்றுமைத்தொகை நிலைக் களத்துப் பிறத்தலின் உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் சிறு பான்மையாயினும், ஒருபயனோக்கி அதனை அதன்முன் வைத்தார். யாதோ பயனெனின், சிறுபான்மை உவமத்தொகைநிலைக்களத்தும் வினைத்தொகைநிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்ப துணர்த்துதலென்க' என்றார். நச்சினார்க்கினியர் சேனாவரையர்மதத் தைக் கைப்பற்றினர்.

தெய்வச்சிலையார் இச்சூத்திரவுரையில் 'துடியிடை எனவும் தாழ் குழல் எனவும் உவமத்தொகைப் புறத்தும், வினைத்தொகைப்புறத்தும் அன்மொழித்தொகை வருமாலெனின், துடி என்பதூஉம் தாழ் என்ப தூஉம் இடை, குழல் என்பவற்றிற்கு அடையாகிவரினல்லது, அவற்றை யுடையாட்குப் பெயராகுங்கால், இறுதிநின்ற பெயர்ப்பொருண்மை ஏனைய வாராமையின் ஆகுபெயரெனினல்லது அன்மொழித்தொகை யாகாதெனக் கொள்க. அதனானேயன்றே இருபெயரொட்டும் என ஆகுபெயர்க்கண் எடுத்தோதுவாராயினர் என உணர்க' என்றும், 'முத விற் கூறுஞ் சினையறி கிளவியும் ........' (தொல். சொல். 114) என்ற சூத்திரத்தின் உரையில் 'இருபெயரொட்டு என்பது இரண்டுபெயர் தொக்கு ஒருசொன்னீர்மைப்பட்டு மற்றொருபொருள் தரு பெயராகி வருவது. அது துடியிடை என்பது; துடிபோன்ற இடையினையுடை யாளைத் துடியிடை என்பவாகலின் ஆகுபெயராயிற்று. இஃது உவமத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையன்றோவெனின் ஆகு பெயராவது ஒட்டப்பட்டபெயரோடு ஒற்றுமைப்பட்டுவரும்.* அன் மொழித் தொகையாவது அப்பொருளின் வேறுபட்டுவரும். அன்ன

*இடை என்பது ஒருவரின் அங்கம்; ஆடை என்பது வேறுபட்டபொருள்,

தாதல் 'அன்மொழி என்றதனுலும் விளங்கும்' என்றுங் கூறினர். ஆசிரியர் இச்சூத்திரத்தில் உவமைதொக்க பெயர்வயினுனும், வினைதொக்க பெயர்வயினுனும் என்று கூருததால் தெய்வச்சிலையார்கூறுவதே ஆசிரியர் மதமாயிருக்கலாம்.

உதாரணத்தில் வெள்ளாடை என்பதைச் சேனுவரையரும் நச்சினுர்க்கினியரும் 'வெள்ளாடையுடுத்தாள்' என்று விரிக்கின்றனர். உரையாசிரியர் 'அன்மொழியாயக்காலும் வெளியது ஆடை என்றே விரியும், பிறிதில்லை' என்று கூறுகின்றனர். அதன்கருத்து வெளியதாடையுடையாள் என்று விரிக்கவேண்டுமே யன்றி வெளிய ஆடை உடையாள் என்று விரிக்கக்கூடாது என்பதே.

*அவைதாம்,
†முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு
419-வது மிருமொழி மேலு மொருங்குட னிலையலு
சூத்திரம். மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே.

---

*இச்சூத்திரத்தின் பொருளும் பின் குறிக்கப்படும் வடமொழிக் காரிகைகளின் பொருளும் ஒன்றியமைந்தமை காண்க.

'[illegible]......... ।
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible]......................... ॥
.........[illegible] ।
[illegible]
[illegible]॥

†தொல்காப்பியத்தில் முன் என்பதற்கு இடமுன்னே பொருள், காலமுன்னன்று.

உரையாசிரியர் முன்மொழிப்பொருளுணாநின்றதற்கு வேங்கைப்பூ என்பதையும், இருமொழிப் பொருளுணாநின்றதற்கு உவாப் பதினான்கு என்பதையும், அன்மொழிப் பொருள்பட நின்றதற்கு வெள்ளாடை முதலியவற்றையுங் காட்டினர். பின்மொழிப்பொருளுணா நின்றதற்கோ வேங்கைப்பூ என்பதையே காட்டி அது காலவகை நோக்கி அவ்வாறாயிற்று என்றார். சேனாவரையர் 'வேற்றுமைத்தொகை முதனான்குதொகையும் முன்மொழிப்பொருள; வேற்றுமைத்தொகையும் பண்புத்தொகையுஞ் சிறுபான்மை பின்மொழிப்பொருள்வுமாம்; உம்மைத்தொகை இருமொழிப்பொருட்டு' என்று கூறி அவற்றிற்கு வேங்கைப்பூ, அடைகடல், உவாப் பதினான்கு என்பவற்றை உதாரணமாகக் கூறினர். நச்சினார்க்கினியர் வேற்றுமைத்தொகையிற் பின்மொழி நிலையலுக்கு ஆரமாலை என்பதனையும், உவமத்தொகையிற் பின்மொழி நிலையலுக்குப் பெண்ணணங்கு என்பதனையும், பண்புத்தொகையிற் பின்மொழிநிலையலுக்கு அடைகடல் என்பதனையும் உதாரணமாகக்கூறினர்.

420-வது சூத்திரம்:—எல்லாத் தொகையு மொருசொன் னடைய.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—அறுவகைத் தொகைச்சொல்லும் எழுவாய் வேற்றுமையியல்பாம் என்று ஈண்டு எய்துவித்தார் என்பது.

சேனாவரையர்:—அறுவகைத்தொகைச்சொல்லும் ஒருசொல்லாய் நடத்தலையுடைய எ - று.

நச்சினார்க்கினியர்:-இருமொழித்தொடரின்கண்ணும் பன்மொழித் தொடரின்கண்ணுந் தொக்குநிற்கும் எல்லாத்தொகைச்சொற்களும் ஒரு சொல் நின்று தன்னை முடிக்குஞ்சொற்களோடு முடியுமாறுபோலத் தாமும் தம்மை முடிக்குஞ்சொற்களோடு முடிதலையுடைய எ - று.

தெய்வச்சிலையார்:—அறுவகைத் தொகைச்சொல்லும் ஒருசொல் நடைய எ - று.

சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் இம்மூவரது பொருளும் ஒன்றே. உரையாசிரியர்கூறியபொருளைச் சேனாவரையர் 'பெயரி னாகிய தொகையுமா ருளவே' (தொல். சொல். 67) என்றசூத்திரத்தின் உரையில் மறுத்தது காண்க.

நிலங்கடந்தான் என்பதைச் சேனாவரையர் தொகையாகக்கொண்டதற்குக் காரணம் 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப........ தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்........' (தொல். எழுத். 132) என்ற சூத்திரத்தில் தொகுதி என்பதற்குச் சமாசன் என்றுபொருள் கொண்டதே. தொகுதி என்ற சொல்லைச் சமாசன் என்ற பொருளைத் தவிர வேறுபொருள்களிலும் ஆசிரியர் உபயோகப்படுத்துவதாலும்,* பெயரும் வினையும் தொகும் என்பதை ஆசிரியர் சூத்திரத்திற் கூறாததாலும், 'பெயரி னாகிய தொகையுமா ருளவே........' (தொல். சொல் 67) என்ற சூத்திரத்தில் உம்மைக்குப்பொருளாக அதனைச் சந்தர்ப்பத்திற்கு விரோதமாகச் சேனாவரையர் கொள்ளவேண்டியிருத்தலாலும், உரையாசிரியரும் தெய்வச்சிலையாரும் கொண்டவாறே கொள்ளுதல் நலம்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் சேனாவரையர்மதத்தைக் கைப்பற்றி நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என்பனவற்றைத் தொகையாகக் கொண்டனர். 'பெயருந்தொழிலும்............' (தொல். எழுத். 132) என்ற சூத்திரத்தின் பொருளைக்கூறுமிடத்துப் 'பெயருந் தொழிலும் பிரிந்திசைத்தவழியுந் தொகையாதல் ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று' என்றார். அந்நுவயத்தில் உரையாசிரியர்மதத்தையும், தொகுதி என்ற சொல்லின்பொருளிற் சேனாவரையர்மதத்தையும் கைப்பற்றிப் பிரிந்திசைத்தவழியுந் தொகையாகும் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

பாடபேதம் :—சைவசித்தாந்தக்கழகச் சேனாவரையப்பதிப்பில் 'உயர்திணையென்ப என்னுந் தொகையல் தொடர்மொழி' என்றுள்ளது. தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பில் தொகையல் என்பதற்குப் பிரதியாகத் தொகையது என்றுள்ளது. தொகையல் என்ற பாடமே பொருந்தும்.

[தொடரும்]

---

*இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும் (தொல். சொல். 33)